பக்கங்கள்:-19

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | மார்கழி 02 | செவ்வாய்க்கிழமை | 17.12.2024 | அதிர்வு 137

## மனோ உட்பட 5 எம்.பிக்கள் இன்று சத்தியப்பிரமாணம்



நாடாளுமன்றம் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.30 மணிக்குக் கூடியதன் பின்னர் அரச 05

## மீனவர்களின் பிரச்சினைக்கு மனிதாபிமான முறையில் தீர்வு

### இந்தியா - இலங்கை கூட்டறிக்கையில் தெரிவிப்பு



"மீனவர்கள் விவகாரத்தை மனிதாபிமான முறையில் தீர்க்க வேண்டியதன் அவசியத்தை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி – இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஆகியோர் ஒப்புக்கொண்டனர். ஆக்ரோஷமான நடத்தை அல்லது வன்முறையைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியத்தை அவர்கள் வலியுறுத்தினர்." – என்று இந்தியா – இலங்கை கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியப்பிரதமர்நரேந்திரமோடியை இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க சந்தித்து இரு தரப்பு பேச்சு நடத்தியதை அடுத்து 06

# மாகாண சபைகள் மிகவும் அவசியம்!

### தேர்தலை நடத்துங்கள் என்று அநுரவிடம் மோடி வலியுறுத்து



இலங்கையில் இன ஐக்கியம் மற்றும் உண்மையான நீதியை நிலைநாட்ட மாகாண சபைகள் இருப்பதன் அவசியத்தை எடுத்துரைத்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் வலியுறுத்தினார் என்றும் இந்திய வெளிவிவகார அமைச்சு தெரிவித்தது. 05

# சமஷ்டி தீர்வே தமிழரின் இலக்கு!

### இலங்கை அரசுக்குச் சர்வதேச நாடுகள் கடும் அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டும் என்று ஸ்ரீநேசன் எம்.பி. கோரிக்கை



"புதிய அரசமைப்பில் கூட்டாட்சி முறைமையிலான சமஷ்டி தீர்வே தமிழர்களுக்கு வேண்டும். அதுவே தமிழர்களின் இலக்கு. தமிழர்களின் இழப்புகளுக்கும், வலிகளுக்கும், எதிர்பார்ப்புகளுக்கும் சமஷ்டி தீர்வே ஒரே வழி."

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுவின் பேச்சாளரும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஞானமுத்து ஸ்ரீநேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

"தேசிய இனப்பிரச்சினைக்குக் கூட்டாட்சி முறைமையிலான சமஷ்டி அடிப்படையிலான தீர்வே ஒரே வழி. அந்தத் தீர்வையே வடக்கு – கிழக்கில் உள்ள தமிழ் மக்கள் விரும்புகின்றார்கள்.

சமஷ்டி தீர்வை வேண்டியே வடக்கு – கிழக்கு தமிழ் மக்கள் இலங்கைத் 06




சிறிலங்கா சுதந்திர கட்சி இன்று பல துண்டுகளாகி, கட்சியின் தலைவர் யார், நிர்வாகி யார் என்று தெரியாத நிலையில் விவகாரம் நீதிமன்றத்தில் பல குழுக்களாக – அணிகளாக – இழுபடும் கட்டத்தில் சின்னா பின்னமாகிக் கிடக்கின்றது.

கட்சியின் தலைமைப் பதவியை குறுக்கு வழியில் கைப்பற்றிய முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கட்சியை அந்தக் கட்டத்துக்கு கொண்டு போய் நாசமாக்கி விட்டுத்தான் ஓய்வாரெனப் பலரும் ஆரூடம் கூறி வந்தனர். அதுவே இப்போது நடைபெற்றிருக்கின்றது.

சந்திரிகா குமாரதுங்க கட்சித் தலைவராகவும் ஜனாதிபதியாகவும் இருந்த சமயத்தில், 2005 இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் மூலம் மஹிந்த ராஜபக்ஷ நாட்டின் அதிபரானார். ஆனால், கட்சியின் தலைவராகத் தொடர்ந்தும் சந்திரிகா குமாரதுங்கவே நீடித்தார். அது தமக்கு இடைஞ்சலாக இருந்தமையால் கட்சியின் கீழ்மட்ட மற்றும் இரண்டாவது மட்ட தலைவர்களின் உதவியோடு கட்சியின் யாப்பை மாற்றி அமைத்தார் 05

# பார் பெர்மிட் வழங்கச் சிபார்சு செய்தவர்களும் சபாநாயகரைப் போல் பதவி விலக வேண்டும்!

## முன்னாள் எம்.பி. சுமந்திரன் வலியுறுத்து

(கி.வசந்தன்)



பார் பெர்மிட் வழங்குவதற்குச் சிபார்சு செய்தவர்களும் சபாநாயகர் பதவி விலகியது போன்று பதவி விலக வேண்டும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

சபாநாயகர் பதவி விலகியமை தொடர்பில் ஊடகவிய லாளர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“சபாநாயகர் கலாநிதிப் பட்டம் தனக்கு இருக்கின்றது, அதனை தற்போது நிரூபிக்க முடியாது என்பதால் பதவி விலகுவதாக அறிவித்துள்ளார். அது நல்லதொரு விடயம். அதை நான் வரவேற்கின்றேன். இதேபோன்று மற்றவர்களும் மற்ற மற்ற விடயங்களுக்காக விலகுவார்களாக இருந்தால் அதுவும் நல்ல விடயம்தான்.

பார் பெர்மிட் எடுத்தவர்களும் தாமாகவே விலகுவார்களாக இருந்தால் அதுவும் நல்ல விடயம்.

விக்னேஸ்வரன் ஐயா தான் பார் பெர்மிட் கொடுத்து விட்டேன் எனத் தெரிவித்து அவர் தேர்தலில் போட்டியிடமால் கொழும்புக்குப் போய் விட்டார்.

ஒவ்வொரு இடங்களிலும் நிறையப் பார் போமிட் கொடுக் கப்பட்டுள்ளது என்று அரசு அறிவித்துள்ளது.

அதைச் சிபார்சு செய்தவர்கள் யார் என்ற தகவல் இன்னும் வரவில்லை. அந்தத் தகவல் வருகின்றபோது சிபார்சு செய்த வர்களும் சபாநாயகர் பதவி விலகியமை போன்று விலக வேண்டும். அதனைச் சந்தோசமாக வரவேற்போம்.” – என்றார்.



# இந்திய உப ஜனாதிபதியைச் சந்தித்த அநுர

## இந்திய சுகாதார அமைச்சருடனும் பேச்சு

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வுக்கும் இந்திய உப ஜனாதிபதி ஜக்தீப் தன் கருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று பிற் பகல் நடைபெற்றது.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலில் கிடைத்த பெரு வெற் றிக்கு ஜனாதிபதி அநுரகுமாரவுக்கு இந்திய உப ஜனாதிபதி வாழ்த்துக்களைத் தெரிவித் தார்.

பொருளாதார ஒத்துழைப்பு, விவசாயம் மற்றும் டிஜிட்டல் மயமாக்கல் போன்ற விட யங்கள் குறித்து இதன்போது ஆராயப்பட் டன.

அதனைத் தொடர்ந்து இந்திய சுகாதார அமைச்சரும் பாரதீய ஜனதா கட்சியின் தலைவருமான ஜகத் பிரகாஷ் நட்டாவுக்கும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் இடையில் சந்திப்பு நடைபெற்றது.



# நீண்ட கால நட்புறவை வலுப்படுத்துவது தொடர்பில் இலங்கை - இந்திய ஜனாதிபதிகள் கலந்துரையாடல்

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் இந்திய ஜனாதிபதி திரௌபதி முர்முவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று மாலை புதுடில்லியில் உள்ள ராஷ்டிரபதி பவனில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பின்போது, இந்திய – இலங்கை இடையிலான நீண்ட கால நட்புறவை வலுப்படுத்துவது மற்றும் பிராந்திய பாதுகாப்பை வலுப்படுத்துவது குறித்து கருத்துப் பரிமாறப்பட்டது.

சிநேகபூர்வ சந்திப்பின் பின்னர் இந்திய ஜனாதிபதி திரௌபதி முர்மு, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு இராப்போசன விருந்து வழங்கினார்.

வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத், தொழில் அமைச்சரும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சருமான பேராசிரியர் அனில் ஜயந்த பெர்னாண்டோ ஆகியோரும் இந்தச் சந்திப்பில் இணைந்து கொண்டனர்



# வவுனியாவிலும் ஒருவருக்கு எலிக்காய்ச்சல் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றம்




(கி.வசந்தன்)

வவுனியாவில் எலிக்காய்ச்சல் தொற்றுக்குள்ளாகி சிகிச்சை பெற்று வந்தவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு நேற்று மாற்றப்பட்டுள்ளார்.

வவுனியா, தாலிக்குளம் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் காய்ச்சல் காரணமாக அனுமதிக்கப்பட்டிருந்தார். எனினும், அவருக்குக் காய்ச்சல் சுகமாகாமையால் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

அங்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் அவருக்கு எலிக்காய்ச்சல் தொற்று இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அவருக்கு அங்கு மேலதிக சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது.

# சு.க. தவிசாளர் பதவிக்காக போட்டியிடப்போவதில்லை

## மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தவிசாளர் பதவிக்காக இனிமேல் போட்டியிடப்போவதில்லை என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு நேற்று அறிவித்துள்ளார்.

தற்போதைய தவிசாளர் நிமல் சிறிபால டி சில்வா மற்றும் பொதுச் செயலாளர் தொடர்பில் தமக்கு ஆட்சேபனை இல்லை எனவும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தமது சட்டத்தரணியின் ஊடாக நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளார்.

நீதிமன்றத்தை அவமதித்ததாக குற்றஞ்சாட்டப்பட்டு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த மனு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நேற்று அழைக்கப்பட்டு இணக்கப்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினரான மொன்டேகு சரத்சந்திர என்பவரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

மைத்திரிபால சிறிசேன, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தவிசாளராக செயற்படுவதைத் தடுத்து கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தால் இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையில் அவர் அந்த பதவியில் செயற்படுவதன் ஊடாக நீதிமன்றத்தை அவமதித்துள்ளதாக மனுதாரரான மொன்டேகு சரத்சந்திர தமது மனுவில் குறிப்பிட்டிருந்தார்.

இந்த மனு மேன்முறையீட்டு நீதிமன்ற தலைவர், நீதிபதி நிஸ்ஸங்க பந்துல கருணாரத்ன மற்றும் நீதிபதி பீ.ஷஷீ மகேந்திரன் ஆகியோர் அங்கம் வகித்த நீதிபதிகள் குழாம் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் சார்பில் நீதிமன்றத்தில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி மைத்திரி குணரத்ன, தமது சேவைபெறுநரின் இணக்கப்பாட்டை நீதிமன்றுக்கு அறிவித்ததுடன் மனுவை இணக்கப்பாட்டுக்கு கொண்டுவருவதற்கான இயலுமை காணப்படுவதாக குறிப்பிட்டார்.

தமது சேவைபெறுநரும் இதற்கு இணங்குவதாக மனுதாரர் தரப்பில் ஆஜரான சட்டத்தரணி ஷாந்த ஜயவர்தன இதன்போது நீதிமன்றில் தெரிவித்தார்.

இந்த விடயங்களை ஆராய்ந்த நீதிபதிகள் குழாம் மனுவை இணக்கப்பாட்டுக்கு கொண்டுவந்து மனுவை மீளப்பெறுக் கொள்வதற்கு மனுதாரர் தரப்பிற்கு அனுமதி வழங்கியது.




# இந்திய முன்னணி வர்த்தகப் பிரதிநிதிகளை டில்லியில் சந்தித்துக் கலந்துரையாடிய அநுர

மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இந்தியா சென்றுள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, நேற்று பிற்பகல் புதுடில்லியில் இந்திய முன்னணி வர்த்தகப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

இந்தியக் கைத்தொழில் சம்மேளத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தக் கலந்துரையாடலில் இந்தியாவின் முன்னணி தொழில் முனைவோர் கலந்துகொண்டனர்.

இலங்கையில் முதலீடு செய்வதற்கான சாதகமான சூழல் குறித்து விளக்கமளித்த ஜனாதிபதி அநுரகுமார திஸா நாயக்க, இலங்கையில் முதலீடு செய்யுமாறு இந்திய தொழில் முனைவோரிடம் கோரிக்கை விடுத்தார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான முதலீடு மற்றும் வர்த்தக உறவுகளை விரிவுபடுத்தும் நோக்கில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் டிஜிட்டல் பொருளாதாரம், சுற்றுலா, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் தகவல் தொழில்நுட்பம் ஆகிய துறைகள் குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டது.

இதன்படி, இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக நடவடிக்கைகளின் அடிப்படையில் இலங்கையில் முதலீட்டு வாய்ப்புகளை விஸ்தரிப்பது குறித்து கலந்துரையாடப்பட்டது.

இலங்கையில் முதலீட்டு வாய்ப்புகள் குறித்து கவனம் செலுத்த இந்திய முன்னணி வர்த்தகப் பிரதிநிதிகள் விருப்பம் தெரிவித்ததுடன், அதற்குத் தேவையான முதலீட்டு வசதிகளை வழங்க இலங்கை அரசு உடன்பாடு தெரிவித்தது.

தொழில் அமைச்சரும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சருமான பேராசிரியர் அனில் ஜயந்த பெர்னாண்டோவும் இந்தச் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தார்.








## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மஹிந்தர். அதன்படி, கட்சியின் உறுப்பினர் ஒருவர் நாட்டின் ஜனாதிபதியானால் அவரே சுதந்திரக் கட்சியின் தலைவர் என யாப்பு மாற்றப்பட்டது. அந்த யாப்பு மாற்றத்தின் மூலம் கட்சித் தலைவர் பதவியை சந்திரிகா குமாரதுங்கவிடமிருந்து பிடுங்கிக் கொண்டார் மஹிந்த ராஜபக்ஷ.

ஆனால் அந்த யாப்பு மாற்றமே மஹிந்த ராஜபக்ஷ பின்னர் சுதந்திரக் கட்சித் தலைமைப் பதவியை இழக்க வழி செய்தது என்பதுதான் இதில் உள்ள துன்பியல் விடயமாகும்.

2015 ஜனாதிபதி தேர்தலின் போது அதுவரை சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளராக இருந்த மைத்திரிபால சிறிசேன எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராகி, அன்னப்பட்சி சின்னத்தில் – சுதந்திர கட்சியின் உத்தியோகபூர்வ வேட்பாளரான மஹிந்த ராஜபக்ஷவை எதிர்த்து – களம் இறங்கினார்.

அவ்வேளையில் சுதந்திரக் கட்சியின் செயலாளர் பதவியில் இருந்து தாம் விலகுகிறார் எனத் தெரிவித்து மைத்திரிபால சிறிசேன வழங்கிய பதவி விலகல் கடிதத்தை ஏற்றுக் கொண்ட கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ, கட்சியின் உத்தியோகபூர்வ வேட்பாளருக்கு எதிராக எதிரணி சார்பில் களம் இறங்கும் மைத்திரிபால சிறிசேனவை அதற்காக கட்சியின் அடிப்படை உறுப்புரிமையில் இருந்து இடைநிறுத்தும் நடவடிக்கையை எடுக்கத் தவறி விட்டார்.

இதனால், ஜனாதிபதி தேர்தலில் வென்ற மைத்திரிபால சிறிசேன, தாம் தொடர்ந்தும் சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் என்றும், சுதந்திரக் கட்சி யாப்பின் படி கட்டி உறுப்பினர் ஒருவர் நாட்டின் ஜனாதிபதியானால் அவரே கட்சியின் தலைவர் என்பதால் சுதந்திரக் கட்சித் தலைவர் பதவி தமக்குரியது என்றும் அறிவித்தார்.

சந்திரிகாவிடம் இருந்து கட்சியின் தலைமைப் பதவியைப் பிடுங்குவதற்கு தான் கொண்டு வந்த கட்சியின் யாப்புத் திருத்தம், தம்மிடமிருந்து கட்சி தலைமைப் பதவியை மைத்திரிபால பறிக்கவும் வழி செய்து விட்டது என்ற வேதனையோடு, கட்சி தலைமை பதவியை விட்டு விலக வேண்டியவரானார் மஹிந்தர்.

பின்னர் வேறு வழி இன்றி தமக்கென பொதுஜனப் பெரமுனை என்ற மொட்டு கட்சியை அவர் உருவாக்கினார் என்பது பின்னர் நடந்த விடயம்.

சுதந்திரக் கட்சியின் தலைமையைப் பிடுங்கிக் கொண்ட மைத்திரிபால சிறிசேன அந்த கட்சியைப் போட்டடித்தார். அவரின் கண் முன்னேயே அந்த கட்சி சுவாஹா ஆகி கரைந்து, போயிற்று. பெரும் எண்ணிக்கையான கட்சியினர் மொட்டு கட்சியோடு ஒன்றிணைந்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணிலின் ஆதரவோடு ஜனாதிபதியான மைத்திரிபால சிறிசேன, பின்னர் போட்டிக் கட்சிக்கு தலைமை ஏற்று, ரணிலின் கட்சியோடு அரசியல் சமர் நடத்தி, நல்லாட்சி அரசின் செயற்பாடுகளையும் குழப்பி, நாசமாக்கினார். அதேநேரம் சுதந்திர கட்சியையும் குட்டிச் சுவராக்கினார்.

ஜனாதிபதிப் பதவியைக் காட்டி சுதந்திர கட்சியின் தலைவர் பதவியை ஏற்ற மைத்திரிபால சிறிசேனவுக்கு, அந்த ஜனாதிபதி பதவி போனதும் கட்சி தலைமைப் பதவியும் போய்விடும், அதனால் அவர் அப்பதவியில் தொடர்வது தவறு என்ற சாரப்பட சந்திரிகா குமாரதுங்க தாக்கல் செய்த மனுவை கொழும்பு மாவட்ட நீதிமன்றம் பரிசீலனைக்கு ஏற்று, அதன் அடிப்படையில் மைத்திரிபால சிறிசேன கட்சியின் தலைவராகத் தொடர்வதற்கு இடைக்காலத் தடை விதித்தது.

அதன் பின்னர், சில காலங்கள் கழித்துத் தான் கட்சித் தலைவர் பதவியில் இருந்து விலகுகிறார் எனத் தெரிவித்து மைத்திரிபால சிறிசேன எழுதிய கடிதத்தை முன்னிறுத்தி, அந்த ராஜினாமா திகதி வரை தாம் கட்சித் தலைவர் என மைத்திரிபால சிறிசேன செயற்பட்டமையால்தான், அந்த திகதியில் ராஜினாமாக் கடிதம் கொடுத்திருக்கிறார் எனக் குறிப்பிட்டு, அது நீதிமன்ற உத்தரவை மீறிய நீதிமன்ற அவமதிப்புக் குற்றம் என்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஒரு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

அந்த வழக்குக்காகத் தமது சட்டத்தரணி மூலம் முன்னிலையான மைத்திரிபால சிறிசேன, தாம் இனிமேல் சுதந்திரக் கட்சியின் தலைவர் என்ற உரித்தைக் கோரவே மாட்டார் என்று நீதிமன்றத்தில் சத்தியக் கடுதாசி தாக்கல் செய்து உறுதிப்படுத்தி இருக்கிறார்.

ஆக, கட்சியைச் சின்னாபின்னமாக்கி, பல துண்டுகளாக உடைத்து, கட்சியே இல்லை என்ற நிலைமையை ஏற்படுத்தி விட்டுத்தான் அவர் இப்போது தாம் இனிமேல் கட்சித் தலைவர் என்று உரிமை கோர மாட்டார் என்று பின்வாங்கி இருக்கிறார்.

இதே நிலைமையைத்தான் இலங்கை தமிழரசுக் கட்சிக்கும் ஏற்படுத்திவிட்டு ஓய்வார் மாவை சேனாதிராஜா என்று தோன்றுகின்றது....!

---

## மனோ உட்பட 5 எம்.பி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மைப்பு மற்றும் நிலையியற் கட்டளைகளுக்கு அமைய முதலில் புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களின் பதவிப் பிரமாணம் இடம்பெறவிருப்பதுடன், இதனைத் தொடர்ந்து புதிய சபாநாயகரின் தெரிவு இடம்பெறவிருக்கின்றது என்று நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை பிரதி சபாநாயகர்

வைத்திய கலாநிதி ரிஸ்வி சாலி தலைமையில் கூடிய நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்திலேயே இது தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டது.

டிசம்பர் 17 ஆம் திகதி (இன்று) மற்றும் 18ஆம் திகதியில் (நாளை) முன்னர் தீர்மானிக்கப்பட்ட நாடாளுமன்ற அலுவல்களில் சில திருத்தங்கள் இதன்போது மேற்கொள்ளப்பட்டன.

இன்று மு.ப. 9.30 மணி முதல் 9.45 மணி வரை புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களின் பதவிப் பிரமாணத்துக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியால் பெயரிடப்பட்ட தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்களில் நால்வரும், புதிய ஜனநாயக முன்னணியால் பெயரிடப்பட்ட தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும் இவ்வாறு பதவிப் பிரமாணம் செய்யவுள்ளனர். இதனைத் தொடர்ந்து புதிய சபாநாயகர் தெரிவுக்காகவும், அதன் பின்னர் வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காகவும் நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, மு.ப. 11.00 மணி முதல் பி.ப. 3.00 மணிவரை பாடசாலை மாணவர்களுக்கான காகிதாதிகளுக்கான ஒதுக்கீடுகளை மேற்கொள்வதுதொடர்பானகுறைநிரப்புதொகைமதிப்பீடு விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, நாளை மீண்டும் இந்த விவாதம் தொடரவுள்ளது.

இதற்கமைய முன்னர் தீர்மானிக்கப்பட்டதற்கு அமைய 2024 வீதி அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான ஒதுக்கீடுகளை மேற்கொள்ளும் குறைநிரப்புத் தொகை மதிப்பீடு விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படாது.

இதன் பின்னர் பி.ப. 3.00 மணி முதல் பி.ப. 6.30 மணி வரை சர்வதேச இறையாண்மை பத்திரங்களை மறுசீரமைப்பது தொடர்பில் எதிர்க்கட்சியால் கொண்டுவரப்படும் சபை ஒத்திவைப்பு பிரேரணை தொடர்பான விவாதத்துக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

நாளை புதன்கிழமை மு.ப. 9.30 மணிக்கு நாடாளுமன்றம் கூடவிருப்பதுடன், மு.ப. 9.30 மணி முதல் மு.ப. 10.30 மணிவரை வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து மு.ப. 10.30 மணி முதல் பி.ப. 5 மணி முதல்நாள் ஒத்திவைக்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான காகிதாதிகளுக்கான ஒதுக்கீடுகளை மேற்கொள்வது தொடர்பான குறைநிரப்புத் தொகை மதிப்பீடு பற்றிய விவாதத்தை நடத்துவதற்கும் இங்கு தீர்மானிக்கப்பட்டது.

இதற்கமைய முன்னர் தீர்மானிக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தல்களில் வெளியிடப்பட்ட விடயங்களைப் பிறிதொரு தினத்தில் விவாதத்துக்கு எடுக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பி.ப. 5 மணி முதல் பி.ப. 5.30 மணி வரை சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான இரண்டு கேள்விகளுக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

---

## மாகாண சபை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மூன்று நாள் அரச முறை பயணமாக நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இந்தியாவின் தலைநகர் புதுடில்லிக்குச் சென்றார். இந்தப் பயணத்தில் இந்திய ஜனாதிபதி திரௌபதி முர்மு, பிரதமர் நரேந்திர மோடி, வெளிவிவகார அமைச்சர் சுப்ரமணியம் ஜெய்சங்கர் உட்பட பல்வேறு தரப்பினரை அவர் சந்தித்துக் கலந்துரையாடினார்.

நேற்று திங்கட்கிழமை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் இரு தரப்பு சந்திப்பை ஜனாதிபதி அநுரகுமார நடத்தியிருந்தார். இந்தச் சந்திப்பில் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பில் இந்திய வெளியுறவு அமைச்சின் செயலாளர் விக்ரம் மிஸ்ரி நேற்று மாலை புதுடில்லியில் ஊடகங்களுக்குத் தெளிவுபடுத்தினார்.

இதன்போது 13ஆவது திருத்தச் சட்டம் மற்றும் மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் இருவருக்கும் இடையில் பேசப்பட்டதா என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதில் அளித்த இந்திய வெளியுறவு அமைச்சின் செயலாளர் விக்ரம் மிஸ்ரி,

“தமிழ் மக்களுக்கான தீர்வு தொடர்பில் இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பல சந்தர்ப்பங்களில் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளார். குறிப்பாக தேர்தல் காலங்களில் அவர் இது குறித்து கூறியிருந்தார். வடக்கு, கிழக்கு உட்பட பல பகுதிகளில அவருக்கு ஆதரவு கிடைக்கப்பெற்றது.

தமிழ் மக்கள் தொர்பிலான விவகாரம் நீண்ட காலமாகப் பேசப்படும் பிரச்சினை. இரு தரப்பு பேச்சுகளில் இந்த விடயங்கள் தொடர்பில் சில விடயங்கள் பேசப்பட்டன.

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதன் அவசியத்தை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் எடுத்துரைத்ததுடன், இன ஐக்கியம் மற்றும் உண்மையான நீதிக்கு மாகாணங்களின் அவசியம் தொடர்பிலும் அவர் வலியுறுத்தினார்.” – என்றார்.

# தெல்லிப்பழையில் திடீர் சுகவீனத்தால் குடும்பப் பெண்ணொருவர் உயிரிழப்பு

## உடற்கூற்று மாதிரிகள் கொழும்புக்கு

யாழ். தெல்லிப்பழையில் திடீர் சுகவீனம் ஏற்பட்ட குடும்பப் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார். மரணத்துக்கான காரணம் தெரியவராத நிலையில் உடற்கூற்று மாதிரிகள் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மாவைகலட்டி, தெல்லிப்பழை பகுதியைச் சேர்ந்த 44 வயதான மூன்று பிள்ளைகளின் தாயான செல்வரூபன் அருள்வாணி என்பவரே உயிரிழந்துள்ளார்.

அந்தப் பெண்ணுக்கும் அவரது குழந்தைக்கும் உடல் சுகவீனம் ஏற்பட்ட நிலையில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை சிகிச்சைக்காக அளவெட்டி வைத்தியசாலைக்குச் சென்று மருந்து எடுத்துக்கொண்டு இருவரும் வீடு திரும்பியுள்ளார்கள்.

வீட்டில்அந்தப்பெண்ணுக்குமீண்டும்சுகவீனம்ஏற்பட்டநிலையில் மயக்கமுற்றுள்ளார். அவரை தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றவேளை அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என்று வைத்தியர்கள் தெரிவித்தனர்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளைத் திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

மேற்படி பெண்ணின் மரணத்துக்கான காரணம் தெரியவராத நிலையில் உடற்கூற்று மாதிரிகள் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

### மீனவர்களின்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இரு நாடுகளுக்கும் இடையே பல்வேறு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன.

இதற்கான நிகழ்ச்சியில் பேசிய இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி,

"இந்தியாவும் இலங்கையும் தங்கள் கூட்டாண்மையை விரிவுபடுத்துவதற்கான எதிர்கால நோக்கத்தை ஏற்றுக்கொண்டன. விரைவில் பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தத்தை முடிக்க முடிவு செய்துள்ளன. மின்சார இணைப்பு மற்றும் பெற்றோலியக் குழாய்களை நிறுவுவதன் மூலம் ஆற்றல் உறவுகளை அதிகரிக்க முடிவு செய்துள்ளன.

பரந்த அளவிலான பேச்சில் இந்த முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்தியா – இலங்கை பொருளாதார கூட்டாண்மையை வலுப்படுத்த இரு தரப்பும் முடிவு செய்துள்ளன. டிஜிட்டல் மற்றும் எரிசக்தி இணைப்பு ஆகியவை ஒத்துழைப்பின் முக்கிய தூண்களாக இருக்கும். மின்சாரம் இணைப்பு மற்றும் பெற்றோலியக் குழாய்களை நிறுவுவதற்கான பணிகள் மேற்கொள்ளப்படும். இலங்கையின் மின் உற்பத்தி நிலையங்களுக்கு திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயுவை இந்தியா வழங்கும்.

இரு நாடுகளுக்கு இடையேயான தொடர்பை மேம்படுத்தும் வகையில் ராமேஸ்வரம் மற்றும் தலைமன்னார் இடையே படகு சேவை தொடங்கப்படும். எங்கள் பாதுகாப்பு நலன்கள் ஒன்றோடொன்று இணைந்திருப்பதை நாங்கள் இருவரும் ஒப்புக்கொள்கிறோம். பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தத்தை விரைவில் முடிக்க முடிவு செய்துள்ளோம்.

மீனவர்களின் வாழ்வாதாரம் தொடர்பான பிரச்சினைகள் குறித்தும் நாங்கள் விவாதித்தோம். இந்த விடயத்தில் மனிதாபிமான அணுகுமுறையுடன் தொடர வேண்டும் என்பதை ஒப்புக்கொள்கிறோம். இலங்கையில் உள்ள தமிழ் சமூகத்தின் விருப்பங்களை இலங்கை அரசு நிறைவேற்றும் என்று இந்தியா நம்புகின்றது.

இந்தியா இதுவரை இலங்கைக்கு 5 பில்லியன் டாலர் கடன் மற்றும் மானிய உதவிகளை வழங்கியுள்ளது. இலங்கையின் 25 மாவட்டங்களிலும் இந்தியாவுக்கு ஒத்துழைப்பு உள்ளது. இந்தியாவின் திட்டங்களின் தேர்வு எப்போதும் அண்டை நாடுகளுக்கு முன்னுரிமை என்பதை அடிப்படையாகக் கொண்டது" – என்று தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க,

"இலங்கை ஜனாதிபதியான பிறகு, இது எனது முதல் வெளிநாட்டுப் பயணம். டில்லிக்கு வர முடிந்ததில் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன். எனக்கு வழங்கப்பட்ட அழைப்புக்காகவும், நான் உட்பட ஒட்டுமொத்த தூதுக் குழுவுக்கும் அளிக்கப்பட்ட அன்பான விருந்தோம்பலுக்காகவும் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பு மேலும் மேம்பட வேண்டும்.

இரு நாடுகளுக்கும் தொல்லையாக மாறியுள்ள மீனவர் பிரச்சினைக்கு நீடித்த மற்றும் நிலையான தீர்வை காண விரும்புகின்றோம். அந்தப் பகுதியில் (இலங்கையை ஒட்டிய இந்திய பகுதியில்) இழுவை படகுகள் மூலம் மீன்கள் பிடிக்கப்படுகின்றன. அந்தப் பகுதியில் உள்ள மீனவர்கள் இதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். ஏனெனில், அது இந்தத் தொழிலுக்கு அழிவை ஏற்படுத்தும்.

பொதுச் சேவைகளை டிஜிட்டல் மயமாக்குவதில் இந்தியா மகத்தான வெற்றியைப் பெற்றுள்ளது. எனவே, இலங்கையும் அதே பாதையில் செல்கிறது. இவ்விடயத்தில் ஆதரவளிப்பதாக பிரதமர் மோடி எனக்கு உறுதியளித்துள்ளார்.

கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு வரலாறு காணாத பொருளாதார நெருக்கடியை நாங்கள் சந்தித்தோம். அந்த புதைகுழியில் இருந்து வெளிவர இந்தியா எங்களுக்கு பெரிதும் உதவியது. இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையில் இலங்கை மிக முக்கியமான இடத்தைப் பெறுகிறது என்பதை நான் அறிவேன்.

சமூக பாதுகாப்பு மற்றும் நீடித்த வளர்ச்சி ஆகியவை நம் நாட்டு மக்கள் எங்கள் இரு தரப்பையும் அதிகாரத்துக்குத் தேர்ந்தெடுத்ததற்கான அடிப்படைக் காரணங்கள். சமீபத்தில் முடிவடைந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலில் இது போன்ற ஒரு வரலாற்று வெற்றியை நாங்கள் பெற்றதில்லை. இலங்கை மக்களால் வெளிப்படுத்தப்பட்ட செய்தி, இலங்கையில் ஒரு புதிய கலாசாரம் உருவாக வழிவகுத்தது. நாட்டின் அனைத்து பகுதிகளிலும் உள்ள மக்கள், அனைத்து சமூகங்களையும், சமயங்களையும் சேர்ந்தவர்கள் எங்கள் மீது நம்பிக்கை வைத்துள்ளனர்." – என்று தெரிவித்தார்.

இதையடுத்து வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில், "இரு தரப்பு மீனவர்களும் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை ஏற்றுக்கொண்டு, வாழ்வாதாரப் பிரச்சினைகளை காரணியாகக் கொண்டு, மனிதாபிமான முறையில் இவற்றைத் தொடர்ந்து தீர்க்க வேண்டியதன் அவசியத்தை தலைவர்கள் ஒப்புக்கொண்டனர். ஆக்ரோஷமான நடத்தை அல்லது வன்முறையைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியத்தை அவர்கள் வலியுறுத்தினர். அண்மையில் கொழும்பில் நடைபெற்ற 6 ஆவது கூட்டுச் செயற்குழுக் கூட்டத்தை அவர்கள் வரவேற்றனர்.

பேச்சுவார்த்தை மற்றும் ஆக்கபூர்வமான செயற்பாடுகள் மூலம் நீண்ட கால மற்றும் பரஸ்பரம் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வை எட்ட முடியும் என்ற நம்பிக்கையில், இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே உள்ள சிறப்பான உறவைக் கருத்தில் கொண்டு, இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் தொடர்ந்து ஈடுபடுமாறு அதிகாரிகளுக்கு அவர்கள் அறிவுறுத்தினர்." – என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

### சமஷ்டி தீர்வே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தமிழரசுக் கட்சிக்கு வாக்களித்தார்கள். எனவே, எமது மக்களின் விருப்பத்துக்கு மாறாகச் செயற்படமாட்டோம்.

புதிய அரசமைப்பில் ஒற்றையாட்சித் தீர்வை நாம் ஒருபோ ;தும் ஏற்கமாட்டோம். மத்தியில் அதிகாரங்கள் குவிந்திருக்கும் இந்த ஒற்றையாட்சியால்தான் தமிழ் மக்கள் பேரவலங்களைச் சந்தித்தார்கள்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசு, புதிய அரசமைப்பை வரைவைத் தயாரிக்கும்போது எமது நிலைப்பாட்டை உதாசீனம் செய்ய முடியாது.

இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகள், அரசியல் தீர்வு விடயத்தில் இலங்கை அரசுக்குக் கடும் அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும்.

அபிவிருத்தியடைந்த பல நாடுகளில் கூட்டாட்சி (சமஷ்டி) முறைமை வெற்றியளித்துள்ளது. எனவே, புதிய அரசமைப்பு ஊடாக இலங்கையிலும் இந்த முறைமை அமுலாக வேண்டும். அதிகாரங்கள் மீளப்பெற முடியாதவாறு பகிரப்பட வேண்டும். அப்போதுதான் இந்த நாட்டில் இனப்பிரச்சினை என்ற ஒன்று இல்லாமல் போகும்." – என்றார்.

රජයේ ප්‍රවෘත්ති දෙපාර්තමේන්තුව
அரசாங்க தகவல் திணைக்களம்
Department of Government Information

# ‘ஜனாதிபதியின் கொடுப்பனவு’ உண்மைக்கு புறம்பான தகவல்

“ஜனாதிபதியின் கொடுப்பனவு“ என்ற பெயரில் அரசாங்கத்தின் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுவதாக வெளியாகும் தகவல்கள் உண்மைக்கு புறம்பானவை என அரசாங்க தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

அத்தகைய வேலைத்திட்டம் தொடர்பில் சமூக வலைத்தளங்களில் தற்போது உண்மைக்கு புறம்பான தகவல்கள் பரப்பப்பட்டு வருவதாக திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அரசாங்க உதவி வேலைத்திட்டம் தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ளப்படுமாயின், அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பின் ஊடாக பொதுமக்களுக்கு அறிவிக்கப்படும் என அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, இது தொடர்பில் உண்மைக்கு புறம்பான தகவல்களைப் பகிர்வதை தவிர்க்குமாறு அரசாங்கம் பொது மக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளது.

# ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து ஜகத் குமார விலகினார்

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இருந்து ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து கொண்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார அந்தக் கட்சியிலிருந்து விலகியுள்ளார்.

கொழும்பில் நேற்று ஊடக சந்திப்பொன்றை நடத்தித் தமது தீர்மானத்தினை அவர் உத்தியோபூர்வமாக அறிவித்துள்ளார்.

அண்மையில் கட்சியில் இணைந்துகொண்ட பிரதிநிதிகளுக்கு நீதி வழங்காமை உள்ளிட்ட பல்வேறு காரணங்களை முன்வைத்து தாம் ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து விலகுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“தேசிய பட்டியல் உறுப்பினர் தெரிவின்போது, கடந்த தேர்தலில் எதிர்க்கட்சியினால் முன்னிலைப்படுத்தப்பட்ட முன்னாள் அமைச்சர் டலஸ் அழகப்பெரும இணைத்துக் கொள்ளப்படவில்லை.

அவர்களுக்குத் தேவையானவர்களை மாத்திரம் தெரிவு செய்வதற்கு முயற்சிக்கின்றமை இதன்மூலம் தெளிவாகின்றது.

அவ்வாறானதொரு கட்சியிலிருந்து நாட்டுக்கும் பொது மக்களுக்கும் தொடர்ந்து சேவையாற்ற முடியாது.

பொதுத் தேர்தல் நிறைவடைந்து கடந்த ஒருமாத காலமாக



அவர்கள் முன்னெடுக்கும் விடயங்களை அவதானித்துக் கொண்டிருந்தேன்.

குறைந்தபட்சம் மனிதாபிமானத்துடன் செயற்படுவதைக் கூட அவதானிக்க முடியவில்லை.

ஆகவே, ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து விலகி எதிர் வரும் காலங்களில் தாம் சுயாதீனமாக செயற்படவுள்ளேன்.”– என்றார்.

# பிரதி சபாநாயகர் ரிஸ்வி சாலிக்கு எதிராக மருத்துவ சபையில் முறைப்பாடு செய்வோம்

## நளீன் பண்டார தெரிவிப்பு



பிரதி சபாநாயகர் ரிஸ்வி சாலிக்கு எதிராக மருத்துவ சபையில் முறைப்பாடு செய்யவுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளீன் பண்டார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“மருத்துவ கட்டளைச் சட்டத்தை மீறியே அவர் நாடாளு–மன்றத்திற்குத் தெரிவாகியுள்ளார்.

விசேட வைத்தியருக்கான பட்டம் பெற வேண்டுமாயின் மருத்துவக் கல்லூரியில் சான்றிதழைப் பெற்றிருத்தல் அவசியம்.

அவர் அவ்வாறு சான்றிதழைப் பெற்றிருக்கவில்லை என்பது தெளிவாகத் தெரியவந்துள்ளது.” – என்றார்.




# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## தமிழர்களுடன் இந்தியா

இலங்கையின் ஜனாதிபதியாக அநுர குமார திஸநாயக்க பதவியேற்ற பிறகு, முதல் வெளிநாட்டுப் பயணமாக இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ளார்.

புதுடில்லியில் ஹைதராபாத் இல்லத்தில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க சந்தித்து விரிவாகப் பேசியிருக்கின்றார்.

குறிப்பாக இந்தியா - இலங்கை உறவுகளை வலுப்படுத்துவது குறித்து இருவரும் ஆலோசனைகளை மேற்கொண்டனர். மேலும், மீனவர்கள் பிரச்சினை, இலங்கைத் தமிழர் பிரச்சினை உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்தும் பேச்சு நடத்தினர்.

இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பில் தாம் வலியுறுத்திக் கூறிய விடயங்களின் சுருக்கத்தை இச்சந்திப்பின் பின்னர் பத்திரிகையாளர்கள் மாநாட்டில் தமது உரையில் கோடிட்டுக் காட்டினார் இந்தியப் பிரதமர் மோடி.

“இலங்கையின் நல்லிணக்கம் மற்றும் புனரமைப்பு குறித்தும் நாம் கலந்துரையாடியுள்ளோம்.

“ஜனாதிபதி திஸநாயக்கா அனைவரையும் உள்ளடக்கி (செயற்படும்) தனது நோக்கு குறித்து என்னிடம் கூறியுள்ளார்.

“தமிழ் மக்களின் அபிலாஷைகளை இலங்கை அரசாங்கம் நிறைவேற்றுமென நாம் நம்புகின்றோம்.

“அத்துடன் இலங்கை அரசமைப்பை முழுமையாக அமுல்படுத்தவும் மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதற்குமான தமது உறுதிமொழியினை அவர்கள் நிறைவேற்ற வேண்டும்.”- என்று சுட்டியிருக்கின்றார் இந்தியப் பிரதமர் மோடி.

இவை வெறும் வார்த்தைகள் - வாசகங்கள் - மட்டுமல்ல. இந்தியப் பிரதமரின் - இந்தியத் தலைமையின் - அர்த்தமும் ஆழமும் பொழிந்த கருத்துக்களாக இவை பார்க்கப்பட வேண்டும்.

இலங்கை அதிபருக்கு இந்தியா சொன்ன முக்கிய செய்தியாகவும் இந்த விடயங்களை கொழும்பு உள்வாங்க வேண்டும்.

சில மாதங்களுக்கு முன்னர் இலங்கையின் ஜனாதிபதித் தேர்தல் சமயத்தில் ஜனாதிபதி தேர்தல் வேட்பாளராக வடக்கே வந்த அநுரகுமார திஸநாயக்க தான் ஜனாதிபதியாகத் தேர்வானால் அரசமைப்பின்13 ஆவது திருத்தத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள அனைத்து அதிகார பகிர்வு விடயங்களையும் முழு அளவில் நடைமுறைப்படுத்துவார் என்றும், மாகாண சபை தேர்தல்களை விரைந்து நடத்தி மாகாண நிர்வாகங்களை மக்களின் பிரதிநிதிகளிடம் கையளிப்பார் என்றும் உறுதி அளித்திருந்தார்.

அந்த உறுதிமொழிகளில் கூறப்பட்ட விடயங்களே பிரதமர் மோடியின் பத்திரிகையாளர் மாநாட்டில் அப்படியே பிரதிபலித்திருக்கின்றன என்பது கவனிக்கப்பட வேண்டும்.

வழமையான 13 ஆவது திருத்த நடைமுறையாக்கத்தை இந்தியப் பிரதமர் இம்முறை வலியுறுத்தவில்லை என்பதை சில தரப்புகள் தூக்கிப் பிடிக்கின்றன. ஆனால் அரசமைப்பின் முழுமையான நடைமுறையாக்கம் என்பதே அரசமைப்பில் இது வரை நடைமுறையாக்கப்படாத 13 ஆவது திருத்தத்தைச் சுட்டும் விடயம்தான்.

இலங்கையின் அரசமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கும், மாகாண சபை தேர்தல்களை நடத்துவதற்குமான தமது உறுதிமொழிகளை ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க நிறைவேற்ற வேண்டும் என்று பிரதமர் மோடி குறிப்பிடுவது, இந்தியாவுக்கு இலங்கை அளித்த வாக்குறுதிகளை மட்டுமல்ல, அதையும் தாண்டி, இலங்கை மக்களுக்கு - குறிப்பாக வடக்கு, கிழக்கு தமிழ் மக்களுக்கு - இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க ஜனாதிபதித் தேர்தல் சமயத்தில் வழங்கிய உறுதிமொழிகளை என்பது கவனிக்கப்பட வேண்டிய விடயமாக இருக்கின்றது.

13 ஆவது திருத்தம், அதிகார பகிர்வு, மாகாண சபைத் தேர்தல்கள் போன்றவற்றைப் பொறுத்தவரையில் இந்திய தலைமை இன்னமும் இலங்கைத் தமிழர்களுடன்தான் நிற்கின்றது என்பது இந்த வாசகங்கள் ஊடாக இலங்கையில் ஜனாதிபதிக்கு இந்தியப் பிரதமரால் நேரடியாகப் புரிய வைக்கப்பட்டிருக்கும் என்று கருத முடியும்.

காணி அதிகாரம், பொலிஸ் அதிகாரம் உட்பட 13 ஆவது திருத்தத்தின் கீழ் பகிரப்பட்ட முழு அதிகாரங்களையும் மாகாணங்களுக்கு வழங்குவது தொடர்பான தமது நடவடிக்கைகளை புதிய இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க விரைந்து செயலில் செய்து காட்ட வேண்டியிருக்கும், அதுவே இந்தியத் தரப்பின் எதிர்பார்ப்பு என்பதும் இலங்கை ஜனாதிபதிக்கு இச்சமயத்தில் உணர்த்தப்பட்டிருக்கும் என்றும் நம்பலாம்.



# அரசமைப்பு சட்டத்தை வேட்டையாடிய காங்கிரஸ்

## மக்களவையில் பிரதமர் நரேந்திர மோடி கடும் விமர்சனம்

"காங்கிரஸ் ஆட்சியின்போது சுமார் 60 ஆண்டுகளில் 75 முறை அரசமைப்பு சட்டம் திருத்தப்பட்டது. அந்த கட்சி அரசமைப்பு சட்டத்தை தொடர்ந்து வேட்டையாடியது."

– இவ்வாறு மக்களவையில் பிரதமர் மோடி குற்றம்சாட்டினார்.

இந்திய அரசமைப்பு சட்டம் ஏற்கப்பட்டு 75 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளது. இதையொட்டி மக்களவையில் கடந்த 2 நாள்களாக சிறப்பு விவாதம் நடந்தது. எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி, மத்திய அமைச்சர்கள், ஆளும் கட்சி, எதிர்க்கட்சி எம்.பி.க்கள் பேசினர். இதற்கு பதில் அளித்து மக்களவையில் பிரதமர் மோடி உரையாற்றுகையில் ,

"முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி ஆட்சியில் அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டது. மக்களின் உரிமைகள் பறிக்கப்பட்டன. பத்திரிகை சுதந்திரம் பறிக்கப்பட்டது. ஜன நாயகத்தின் குரல்வளை நெரிக்கப்பட்டது. என்ன பரிகாரம் செய்தாலும் அவசர நிலையை அமல்படுத்திய காங்கிரஸின் பாவம் மறையாது.

நமது நாட்டை மிக நீண்ட காலமாக குறிப்பிட்ட குடும்பத்தினரே ஆட்சி செய்துள்ளனர். சுமார் 55 ஆண்டுகள் நாட்டை ஆண்டுள்ளனர். அந்த குடும்பத்தின் தீய சிந்தனைகள், தீய நடவடிக்கைகள், தீய கொள்கைகள் இன்றளவும் தொடர்கிறது.

1951 இல் பிரதமர் நேரு அனைத்து மாநில முதல்வர்களுக்கும் கடிதம் எழுதினார். அதில் அரசமைப்பு சட்டத்துக்கு எதிரான கருத்துகளை பதிவிட்டிருந்தார். இதுதொடர்பாக நேரு அரசை அப்போதைய குடியரசுத் தலைவர் ராஜேந்திர பிரசாத் பகிரங்கமாக கண்டித்தார். ஆச்சார்ய கிருபளானி, ஜெயபிரகாஷ் நாராயண் உள்ளிட்ட மூத்த தலைவர்களும் கண்டித்தனர். ஆனால், அவர்களது கருத்துகளை நேரு ஏற்கவில்லை.

1951ஆம் ஆண்டில் அரசமைப்பு சட்டத்தில் பிரதமர் நேரு முதல் திருத்தம் மேற்கொண்டார். அதன் பிறகு காங்கிரஸ் ஆட்சியின்போது சுமார் 60 ஆண்டுகளில் 75 முறை அரசமைப்பு சட்டம் திருத்தப்பட்டது. அந்த கட்சி அரசமைப்பு சட்டத்தை தொடர்ந்து வேட்டையாடியது. 1975 இல் இந்திரா காந்தி மட்டும் 39 முறை திருத்தங்கள் செய்தார்.

கடந்த 1971 இல் உச்ச நீதிமன்றம் முக்கிய முடிவை எடுத்தது. அப்போது அரசமைப்பு சட்டத்தில் திருத்தம் செய்து உச்ச நீதிமன்றத்தின் முடிவு மாற்றப்பட்டது. நீதிமன்றங்களின் சிறகுகள் வெட்டப்பட்டன.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி ஆட்சியில் ஷா பானு வழக்கில் அரசமைப்பு சட்டத்தின் ஆன்மா சிதைக்கப்பட்டது. விவாகரத்துக்கு பிறகு முஸ்லிம் பெண்களுக்கு ஜீவனாம்சம் உண்டு என்று ஷா பானு வழக்கில் உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. இதில் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு ஆதரவாக செயல்படாமல் சிறுபான்மையினர் வாக்கு வங்கிக்காக அரசமைப்பு சட்டத்தை திருத்தி உச்ச நீதிமன்ற தீர்ப்பையே ராஜீவ் காந்தி மாற்றினார்.

மன்மோகன் சிங் ஆட்சியில் தேசிய ஆலோசனை கவுன்சில் அமைக்கப்பட்டது. இதன் தலைவராக சோனியா காந்தி பதவி வகித்தார். பிரதமர் பதவிக்கு மேலானதாக இந்த பதவி கருதப்பட்டது. இதன்மூலம் அரசமைப்பு சட்டம் மீது மீண்டும் தாக்குதல் நடத்தப்பட்டது.

மதத்தின் அடிப்படையில் இட ஒதுக்கீட்டை அமல்படுத்தக்கூடாது என்பதில் அரசமைப்பு சட்டத்தை உருவாக்கிய தலைவர்கள் மிகவும் உறுதியாக இருந்தனர். ஆனால், காங்கிரஸ் கட்சி, வாக்கு வங்கி அரசியலை கருத்தில் கொண்டு மத அடிப்படையில் இடஒதுக்கீடு அமல்படுத்த முயற்சி செய்கிறது. இது எஸ்சி. எஸ்டி. ஓ.பி.சி. பிரிவினருக்கு இழைக்கப்படும் அநீதி.

மத அடிப்படையிலான சட்டங்கள் நீக்கப்பட வேண்டும். பொது சிவில் சட்டம் அமல்படுத்தப்பட வேண்டும் என்று தான் அம்பேத்கர் கூறியுள்ளார். உச்ச நீதிமன்றமும் இதை வலியுறுத்தி வருகிறது. இதன்படி பொது சிவில் சட்டத்தை நிறைவேற்ற மத்திய அரசு தீவிர முயற்சி மேற்கொண்டு வருகிறது.

காங்கிரஸை பொருத்தவரை அரசமைப்பு சட்டத்தை அரசியலாக்கி ஆதாயம் அடைந்து வருகிறது. அதை ஆயுதமாக்கி மக்களை அச்சுறுத்தி வருகிறது."– என்றார்.



# சுதந்திரப் போராட்டம் பற்றி மோடிக்கு அதிகம் தெரியாது

## மாநிலங்களவையில் கார்கே காட்டம்

“பிரதமர் மோடிக்கு நாட்டின் சுதந்திரப் போராட்டம் பற்றி அதிகம் தெரியாது. மக்களவையில் பேசிய அவர், அரசியல் சாசனத்தை உருவாக்கியதற்காக காங்கிரஸைப் பற்றி கிண்டல் செய்தார்.”

– இவ்வாறு மாநிலங்களவையில் எதிர்க்கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன் கார்கே தெரிவித்துள்ளார்.

இந்திய அரசமைப்பின் 75 ஆண்டுகால புகழ்பெற்ற பயணம் என்ற தலைப்பில் மாநிலங்களவையில் நடந்த விவாதத்தில் பங்கேற்றுப் பேசிய மல்லிகார்ஜுன் கார்கே,

“நாட்டுக்காக போராடாதவர்களுக்கு சுதந்திரம் மற்றும் அரசமைப்பின் முக்கியத்துவம் எப்படி தெரியும்? ஆனால், நாங்கள் பொய் சொல்வதாக பிரதமர் கூறுகிறார். ஆனால் நம்பர் ஒன் பொய்யர் பிரதமர்தான். 15 லட்சம் ரூபா வரும் என்று சொன்னார். ஆனால், ஒன்றும் வரவில்லை. இவர்கள் நாட்டை தவறாக வழிநடத்துகிறார்கள். பொய் சொல்லி மக்களை ஏமாற்றுகிறார்கள். அரசமைப்பு சட்டத்தை வலுப்படுத்த கடந்த 11 வருடங்களில் என்ன செய்தார்கள் என்பதை பிரதமர் கூறியிருக்க வேண்டும்.

ஜவஹர்லால் நேருவின் பெயரால் அனைவரையும் அவமதிக்கிறீர்கள். அவருடன் சர்தார் படேலும் இருந்தார், அம்பேத்கரும் இருந்தார். நேரு முதல்வர்களுக்கு கடிதம் எழுதியிருந்தார். மோடி, தனது உரையில் உண்மைகளை திரித்து நேருவை அவதூறாகக் குறிப்பிட்டார். அதற்காக அவர் நாட்டிடம் மன்னிப்பு கேட்க வேண்டும். பா.ஜ.க. இடஒதுக்கீட்டுக்கு எதிரானது. அதனால்தான் சாதிவாரி கணக்கெடுப்புக்கு எதிராக நிற்கிறார்கள். மோடிக்கு நாட்டின் சுதந்திரப் போராட்டம் பற்றி அதிகம் தெரியாது. மக்களவையில் பேசிய அவர் அரசியல் சாசனத்தை உருவாக்கியதற்காக காங்கிரஸைப் பற்றி கிண்டல் செய்தார்.

கடந்த ஒன்றரை ஆண்டுகளாக மணிப்பூரில் வன்முறையும் அமைதியின்மையும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. ஆனால், இதுவரை பிரதமர் நரேந்திர மோடி அந்த மாநிலத்துக்குச் செல்லவில்லை. அங்குள்ள நிலைமையை மதிப்பிடுவதற்கு பிரதமருக்கு நேரம் இல்லை. இத்தனைக்கும் பிரதமர் மோடி, நாட்டிற்குள்ளும் வெளியிலும் எல்லா இடங்களிலும் பயணம் செய்கிறார். ஆனால், மணிப்பூருக்குச் செல்ல அவருக்கு நேரமில்லை. மணிப்பூர் செல்ல அவர் தயாராக இல்லை.”– என்றார்.



# காசாவில் உள்ள பாடசாலை மீது இஸ்ரேல் இராணுவம் தாக்குதல்

## 20 பேர் உயிரிழப்பு



காசாவில் பாடசாலையொன்றின் மீது இஸ்ரேல் இராணுவம் நடத்திய தாக்குதலில் சுமார் 20 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இந்த பாடசாலையில் போரினால் வீடுகளை இழந்த பலஸ்தீன மக்கள் முகாமிட்டு தங்க வைக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் சபையின் நிவாரண முகம் என தெரிவிக்கப்படுகின்றது.

இஸ்ரேல் – காசாவுக்கிடையில் கடந்த ஒக்டோபர் மாதம் 7 ஆம் திகதியிலிருந்து மோதல் இடம்பெற்று வருகின்றது.

அமெரிக்க ஜனாதிபதியாக தெரிவாகியுள்ள டொனால்ட் ட்ரம்ப் மற்றும் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு இடையே கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.



இந்தக் கலந்துரையாடல் காசாவில் ஹமாஸ் கைதிகளை விடுவிப்பது மற்றும் சிரியாவின் சமீபத்திய நிலைமை குறித்து இடம்பெறுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

அடுத்த மாதம் அமெரிக்க ஜனாதிபதியாக ட்ரம்ப் பதவியேற்பதற்கு முன்னதாக இந்த பிரச்சினைக்கு தீர்வு காணப்படாவிட்டால் ஏற்படும் பாதிப்புகள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

இந்நிலையில், தெற்கு காசாவில் உள்ள கான் யூனிஸ் நகருக்கருகில் உள்ள பாடசாலையொன்றின் மீது இஸ்ரேல் இராணுவம் நடத்திய தாக்குதலில் சுமார் 20 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.








# யூன் சுக் யோலின் பதவி நீக்க விசாரணையை தென்கொரிய அரசமைப்பு நீதிமன்றம் ஆரம்பித்தது

இராணுவச் சட்டத்தை விதிக்கும் முயற்சியில் தோல்வியடைந்ததற்காக பதவியில் இருந்து இடைநீக்கம் செய்யப்பட்ட ஜனாதிபதி யூன் சுக் யோலின் பதவி நீக்கம் தொடர்பான விசாரணையை தென் கொரியாவின் அரசமைப்பு நீதிமன்றம் நேற்று தொடங்கியது.

தென் கொரியாவின் நாடாளுமன்றத்தால் கடந்த சனிக்கிழமையன்று யூன் சிவிலியன் ஆட்சியை இடை நிறுத்துவதற்கான அவரது குறுகிய கால முயற்சியால் நீக்கப்பட்டார்.

இது நாட்டை பல ஆண்டுகளில் மிக மோசமான அரசியல் கொந்தளிப்புக்குள் தள்ளியது.

பதவி நீக்கத்தை உறுதி செய்ய வேண்டுமா என்பதை தீர்மானிக்க அரசமைப்பு நீதிமன்றத்திற்கு சுமார் ஆறு மாதங்கள் கால அவகாசம் உள்ளன.

அவர் பதவி நீக்கப்பட்டால் இரண்டு மாதங்களுக்குள் புதிய தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

இந்த நிலையில், யூன் சுக் யோலின் பதவி நீக்கம் தொடர்பான நடவடிக்கைகளை தென் கொரியாவின் அரசமைப்பு நீதிமன்றம் நேற்று திங்கள் கிழமை காலை 10.00 மணிக்கு முறைப்படி ஆரம்பித்துள்ளது.

யூனுக்குப் பதிலாக பிரதமர் ஹான் டக்-சூ தென்கொரியாவின் இடைக் காலத் தலைவராக பணியாற்றுகிறார்.

விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், யூன் பயணத் தடையினை எதிர்கொண்டுள்ளார்.



இதனிடையே, கிளர்ச்சி குற்றச் சாட்டுகள் தொடர்பாக பாதுகாப்பு புலனாய்வுக் கட்டளையின் தற்போதைய மற்றும் முன்னாள் தலைவர்கள் இருவரையும் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பொலிஸார் கைது செய்தனர் என தென்கொரிய செய்தி நிறுவனமான யோன்ஹாப் கூறியுள்ளது.

அதேநேரம், இராணுவ சிறப்புப் போர்க் கட்டளைத் தலைவரான குவாக் ஜாங்-கியூனுக்கு எதிராக பிடியாணை கோருவதாகவும் வழக்குரைஞர்கள் தெரிவித்தனர்.

இராணுவச் சட்ட முயற்சியின் போது நாடாளுமன்றத்திற்கு சிறப்புப் படை வீரர்களை அனுப்பியதாக குவாக் மீது குற்றம் சாட்டப்பட்டது, இது படையினருக்கும் நாடாளுமன்ற ஊழியர்களுக்கும் இடையே வியத்தகு மோதலை ஏற்படுத்தியதாகவும் குறிப்பிட்டது.


யூன், கடந்த டிசம்பர் 3 ஆம் திகதி முன்வைத்த இராணுவச் சட்டம், தென் கொரியாவில் 40 ஆண்டுகளுக்கும் மேலாக முதன்முறையாக, அரசியல் குழப்பத்தை உருவாக்கியது மற்றும் அவரை வெளியேற்றுவதற்கு அழைப்பு விடுக்கும் பெரிய எதிர்ப்புகளுக்கு வழிவகுத்தது.

யூனுக்கு எதிரான பரந்த எதிர்ப்புகள், அவருக்கு ஆதரவாக சிறிய பேரணிகள், அவரது இராணுவச் சட்ட ஆணையிலிருந்து தென் கொரிய தலைநகரை உலுக்கியது.

எனினும், பெரிய வன்முறை அல்லது காயங்கள் எதுவும் ஏற்படவில்லை.

இராணுவச் சட்டம் ஆறு மணி நேரம் மட்டுமே நீடித்தது, பின்னர் தேசிய சட்ட மன்றம் ஒருமனதாக அதை நீக்குவதற்கு வாக்களித்ததைத் தொடர்ந்து சடத்தை நீக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

இந்த நிலையில், கடந்த சனிக்கிழமையன்று யூன் இரண்டாவது பதவி நீக்க வாக்கெடுப்பை எதிர்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.




# வங்காள விரிகுடாவில் நிலவும் கொந்தளிப்பு நிலை தொடரும்

தென்கிழக்கு வங்காள விரிகுடா கடற்பரப்பில் நிலவும் கொந்தளிப்பு நிலையானது தொடர்ந்தும் நிலவும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த நிலைமையானது மேலும் வலுவடைந்து மேற்கு நோக்கி நகர்ந்து வடமேற்கு திசையில் நகரும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனிடையே, வளிமண்டலவியல் திணைக்களத்தினால் வெளியிடப்படும் அறிவிப்புகள் தொடர்பில் அவதானமாக செயற்படுமாறு கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்களில் வசிக்கும் பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், வடக்கு, கிழக்கு, வடமத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலும் மாத்தளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் இடைக்கிடையே இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

வடக்கு, கிழக்கு, வடமத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலும் மாத்தளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களின் சில பிரதேசங்களிலும் 100 மில்லி மீற்றருக்கும் அதிகளவு மழை பெய்யக்கூடும் என கூறப்பட்டுள்ளது.

# இந்தியாவிலிருந்து 60 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்படும்: வசந்த சமரசிங்க



"சந்தையில் நிலவும் அரிசி தட்டுப்பாட்டுக்கு இந்த வாரத்துக்குள் தீர்வு எட்டப்படும். இம்மாதத்துக்குள் இந்தியாவில் இருந்து 60 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்படும். பண்டிகை காலத்தில் ஒருசில அத்தியாவசிய பொருள்களின் விலைகள் குறைக்கப்படும்."

– இவ்வாறு வர்த்தகம், வாணிபம், உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

நாரஹேன்பிட்டி பகுதியில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற நிகழ்வில் கலந்துக் கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"திட்டமிட்ட வகையில் சந்தையில் அரிசி தட்டுப்பாடு ஏற்படுத்தப்பட்டது. அரிசி தட்டுப்பாடு ஊடாக அரசாங்கத்தை நெருக்கடிக்குள்ளாக்குவதற்கு ஒருதரப்பினர் முயற்சி செய்தார்கள். பிரதான அரிசி உற்பத்தியாளர்களுக்கு அடிபணியாமல் சிறந்த தீர்மானத்தை எடுத்துள்ளோம்.

அரிசி இறக்குமதிக்கு விதிக்கப்பட்டிருந்த வரையறைகள் தற்காலிகமாக நீக்கப்பட்டு இம்மாதம் 20 ஆம் திகதி வரை தனியார் துறையினர் அரிசி இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இறக்குமதி செய்யப்பட்ட அரிசியில் 75 ஆயிரம் கிலோகிராம் அரிசி பாவனைக்கு உகந்ததல்ல என்று கண்டறியப்பட்டதைத் தொடர்ந்து அவை மீள் ஏற்றுமதி செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தனியார் துறை ஊடாக 25 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தியாவில் இருந்து 70 ஆயிரம் கிலோகிராம் அரிசி இறக்குமதி செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில் அதில் 5200 மெற்றிக் தொன் அரிசி நேற்று நாட்டை வந்தடைந்தது. இம்மாதம் 31 ஆம் திகதிக்குள் இருந்து இந்தியாவில் இருந்து 60 ஆயிரம் மெற்றிக்தொன் அரிசி இறக்குமதி செய்யப்படும்.

பண்டிகை காலத்தை முன்னிட்டு ஒருசில அத்தியாவசிய பொருட்களின் விலைகள் குறைக்கப்படும். எந்த உணவுப் பொருள்களுக்கும் தட்டுப்பாடு ஏற்படாது. நிர்ணய விலையை காட்டிலும் அதிக விலைக்கு பொருட்களை விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். நுகர்வோர் அதிகார சபை ஊடாக தொடர்ச்சியான சுற்றி வளைப்புக்கள் மேற்கொள்ளப்படும்."– என்றார்.

# தேசிய மக்கள் சக்தியின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்க முடியாது: சாகர காரியவசம்



"சபாநாயகர் பதவிக்கு ஐக்கிய மக்கள் சக்தி பரிந்துரைக்கும் நபருக்கு ஆதரவு வழங்குவோம். போலியான கல்வித் தகைமையை கொண்டுள்ள தேசிய மக்கள் சக்தியின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்க முடியாது."

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவிலயாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான பணியகத்தின் உதவி செயலாளர் டொனால்ட் லூ அண்மையில் இலங்கைக்கு உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டிருந்தார்.

இவ்விஜயத்தின் போது அவர் ஜனாதிபதி உட்பட உயர்மட்ட தரப்பினரை சந்தித்து பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்தார்.

இலங்கையின் நிதி மோசடி செய்யப்பட்டு அவை பிற நாடுகளில் பதுக்கி வைக்கப்பட்டிருக்குமாயின் அந்த நிதியை நாட்டுக்கு கொண்டு வர முழுமையான ஒத்துழைப்பு வழங்குவதாக டொனால்ட் லூ ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவிடம் குறிப்பிட்டுள்ளார்.

ராஜபக்ஷர்கள் அரச நிதியை மோசடி செய்து அவற்றை உகண்டாவில் பதுக்கி வைத்திருப்பதாக ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க உட்பட தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் குறிப்பிட்டனர்.

ஆகவே தற்போது நல்லதொரு வாய்ப்பு ஜனாதிபதிக்கு கிடைத்துள்ளது. அமெரிக்காவின் உதவியை பெற்று வெளிநாடுகளில் பதுக்கி வைத்துள்ள நிதியை நாட்டுக்கு கொண்டு வருமாறு அரசாங்கத்திடம் வலியுறுத்துகிறோம்.

சபாநாயகரின் விவகாரத்துடன் அரசாங்கத்தின் உண்மை முகம் வெளிப்பட்டுள்ளது. போலி கல்வித் தகைமையுடன் கற்றோர் என்று குறிப்பிட்டுக் கொள்ளும் தேசிய மக்கள் சக்தியினர் தமது கல்வித் தகைமையை பகிரங்கப்படுத்த வேண்டும்.

ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் சபாநாயகர் பதவிக்கு முன்மொழிவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. சிறந்த நபரை எதிர்க்கட்சி முன்மொழிந்தால் முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம்.

சிறந்த அரசியல் கலாச்சாரத்தை ஏற்படுத்துவதாக குறிப்பிட்டுக் கொண்டு ஆட்சிக்கு வந்த தேசிய மக்கள் சக்தியின் மீது சிறிதளவேனும் நம்பிக்கை கிடையாது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பு ஏனைய முன்னாள் ஜனாதிபதிகளுக்கு இணையாக குறைக்கப்பட்டுள்ளது.

யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து ஒட்டுமொத்த மக்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்திய மஹிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பை சடுதியாக குறைத்துள்ளமை முற்றிலும் தவறானது."– என்றார்.

# பஸ்ஸில் பயணித்த வயோதிபர் மாரடைப்பால் பரிதாப மரணம்!



தனியார் பஸ்ஸில் சுழிபுரத்தில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த பயணி ஒருவர் வாயிலிருந்து நுரை வெளிவந்த நிலையில் திடீரென உயிரிழந்துள்ளார்.

சுழிபுரம் மேற்கு பகுதியைச் சேர்ந்த இளையதம்பி சிவசுப்பிரமணியம் (வயது 71) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மேற்படி நபர் நேற்று திங்கட்கிழமை காலை 10.30 மணியளவில் 782 வழித்தட பஸ்ஸில் சுழிபுரத்தில் இருந்து பயணத்தை மேற்கொண்டார். இதன்போது அவருக்கு இடைவழியில் வாயில் இருந்து நுரை வெளிவந்தது.

பின்னர் தனியார் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு, அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். இருப்பினும் அவர் உயிரிழந்து விட்டார் என்று மருத்துவர்கள் தெரிவித்தனர்.

சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

மாரடைப்பு காரணமாக மரணம் சம்பவித்துள்ளது என்று பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# சாரதிகளுக்கு மயக்க மருந்து கொடுத்து கடத்தப்பட்ட 2 ஓட்டோக்கள் விற்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டன

## ஒருவர் கைது; வவுனியா பொலிஸார் நடவடிக்கை





**(கி.வசந்தன்)**

வவுனியாவில் ஓட்டோச் சாரதிகளுக்கு மயக்க மருந்து கொடுத்து ஓட்டோக்களைத் திருடி விற்பனை செய்த நிலையில் இரு முச்சககர ஓட்டோக்கள் மீட்கப்பட்டுள்ளமையுடன்,்து யொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப பிரிவு பொலிசார் நேற்றுத் தெரிவித்தனர்.

வவுனியா நகரப் பகுதியில் இருந்து சிவப்பு நிற ஓட்டோ ஒன்றை வாடகைக்கு அமர்த்திச் சென்று, ஓட்டோச் சாரதிக்கு மயக்க மருந்தைஜ் கொடுத்து அவரை கீழே விழுத்தி விட்டு, அந்த ஓட்டோவைக் கடத்திச் சென்ற சம்பவம் ஒன்று பதிவாகியிருந்தது.

அதுபோன்று, வவுனியா, பூவரசன் குளம் பகுதியில் இருந்து உளுக்குளம் நோக்கி ஓட்டோவை வாடகைக்கு அமாத்திச் சென்று சாரதிக்கு மயக்க மருத்து கொடுத்து ஓட்டோ ஒன்று கடத்திச் செல்லப்பட்ட சம்பவமும் பதிவாகியிருந்தது.


இவை தொடர்பில் வன்னி மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் சமந்த விஜசேகரவின் ஆலோசனையில், வவுனியா மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மலன் பெரேராவின் வழிநடத்தலில், வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி அழகியவண்ண தலைமையில் சப் இன்ஸ்பெக்டர் சாரங்க ராஜகுரு, பொலிஸ் சார்ஜன்ட்டுகளான திசாநாயக்க (37348), ரன்வெல (61518), பொலிஸ் கான்ஸ்டபிள்களான சிந்தக (78448), விதுசன் (91800), சாரதியான திஸதா நாயக்க (18129) ஆகியோர் அடங்கிய பொலிஸ் குழு விசேட நடவடிக்கையை மேற்கொண்டிருந்தது.

இந்தச் சம்பவங்களுடன் தொடர்புடைய ஒருவர் கைது செய்யபபட்டார். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் வவுனியா நகரப் பகுதியில் கடத்தப்பட்ட ஓட்டோ நீல நிற வர்ணப்பூச்சுப் பூசி வாகன இலக்கத் தகடு மாற்றபபட்டு கெக்கிராவ பகுதியில் நின்ற நிலையில் மீட்கப்பட்டது.

அத்துடன், வவுனியா, பூவரசன்குளம் பகுதியில் இருந்து உளுக்குளம் சென்ற போது கடத்திச் செல்லப்பட்ட பச்சை நிற ஓட்டோ 9 லட்சம் ரூபாய்க்கு இலக்கத் தகடு மாற்றி விற்பனை செய்யப்பட்ட நிலையில் சாய்ந்தமருது பகுதியில் மீட்கப்பட்டது.

இரு சம்பவங்கள் தொடர்பிலும் கெக்கிராவ பகுதியில் வசித்து வரும் 37 வயது நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளமையுடன், மேலதிக விசாரணைகளின் பின்னர் அவரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதவேவேளை, வாகனங்களை வாடக்கு அமர்த்தி வருவோர் தரும் குடிபானங்களை அருந்தாது விழிப்புடன் செயற்படுமாறும் வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.







# வவுனியாவில் காற்றினால் மரம் முறிந்ததில் அரச விடுதியும் வர்த்தக நிலையமும் சேதம்

(கி.வசந்தன்)

வவுனியா, ரயில் நிலையம் முன்பாக நின்ற பழமையான மரம் நேற்று மதியம் காற்றின் காரணமாக முறிந்து விழுந்ததில் அரச விடுதி ஒன்றும் வர்த்தக நிலையம் ஒன்றும் சேதமடைந்துள்ளன.

வவுனியாவில் மீண்டும் அவ்வப்போது கனமழை பெய்து வருவதுடன், காற்றும் வீசி வருகின்றது. நேற்று மதியம் வீசிய காற்றின் காரணமாக வவுனியா ரயில் நிலையம் முன்பாக நின்ற பழையான பாரிய மரம் ஒன்று முறிந்து விழுந்துள்ளது. இந்த மரத்தின் கிளை மற்றுமொரு மரக் கிளை மீது முறிந்து விழுந்ததால் அம் மரமும் முறிந்து விழுந்துள்ளது.

இதன் காரணமாக, அருகில் இருந்து அரச விடுதியின் கூரைப் பகுதி சேதமடைந்துள்ளது. வர்த்தக நிலையம் ஒன்றின் கூரை மற்றும் சுவர் பகுதி என்பன உடைந்து சேதமடைந்துள்ளன. அத்துடன் மின்சார இணைப்பும் அறுந்து மின் துண்டிப்பு ஏற்பட்டுள்ளது.















# வீதி நீளத்துக்கு முழு வீதியையுமே வெட்டி வெள்ள வாய்க்கால மாற்றிய அதிகாரிகள்!

## அரச அதிபரிடம் கஜேந்திரகுமார் எம்.பி. சுட்டிக்காட்டு

கொடிகாமம் பகுதியில் ஒரு வீதியின் நீளத்துக்கு வீதியைத் தோண்டி வெட்டி, முழு வீதியையே வடிகாலாக மாற்றியமை குறித்து விசாரணை நடத்தவும், குறித்த வீதியைத் திருத்தவும், மாற்று வடிகால் அமைப்பை ஏற்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் என அரசாங்க அதிபருக்கு நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கடிதம் மூலம் கோரியிருக்கின்றார்.

கொடிகாமம் ஜே-326 கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள மடத்தடி வீதியானது கடந்த ஐம்பது வருடங்களாகப் புனரமைக்கப்படவில்லையென கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

அந்தப் பகுதியில் ஒவ்வொரு ஆண்டிலும் மழைபெய்யும் ஒவ்வொரு சந்தற்பத்திலும் வெள்ளம் தேங்கி நிற்பதனால் பொது மக்கள் வீதியால் பயணம் செய்ய முடியாத நிலை ஏற்படுவதுடன் பெருமளவான குடும்பங்கள் வீடுகளிலிருந்து வெளியேறி இடைத்தங்கல் முகாம்களுக்கும் உறவினர், நண்பர்களது வீடுகளில் தஞ்சடைய வேண்டிய நிலையும் ஏற்படுகின்றது.

அண்மையில் பெய்த கனமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தை வெளியேற்றுவதற்காக சாவகச்சேரி பிரதேச சபையினரால் வீதியின் நடுவே, வீதி நீளத்துக்கு நீண்ட வாய்க்கால் தோண்டப்பட்டுள்ளது. வீதியின் நடுவே நீளத்துக்கு வாய்க்கால் தோண்டினால் மக்களது போக்குவரத்து முற்றாகப் பாதிக்கப்படும் என்பதனை அப்பகுதி மக்கள் சுட்டிக்காட்டியபோதும் அவர்களது ஆட்சேபனைகள் எதனையும் பொருட்படுத்தாமல் அந்த வாய்க்கால் தோண்டப்பட்டுள்ளது. இதனால் அப்பாதையூடாகப் பயணிக்கும் ஏழு கிராமங்களைச் சேர்ந்த மக்களதும் போக்குவரத்து முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக கொடிகாமம் சந்தையும் தமது உற்பத்திகளை எடுத்துச் செல்லும் விவசாயிகள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

- பொறுப்பற்ற விதமாக வீதியின் நடுப்பதியை தோண்டி ஆழமான வாய்க்காலாக மாற்றியமை தொடர்பில் முழுமையான விசாரணை நடாத்தப்படல் வேண்டும்.
- அந்தப் பகுதியில் தேங்கி நிற்கும் வெள்ளத்தை வெளியேற்றுவதற்கான வடிகால் அமைக்கப்படல் வேண்டும்.
- அந்த வீதியை உடனடியாகப் புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

- இவ்வாறு கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தமது கடிதத்தில் கோரியுள்ளார்.





# இன்றைய ராசி பலன்கள் - 17.12.2024




இன்று குறைந்த செயலாற்றலுடன் காணப்படுவீர்கள். ஆன்மீக ஈடுபாடு மற்றும் பிரார்த்தனை மேற்கொள்வது நல்லது. தியானமும் மேற்கொள்ளலாம். பிறருடன் உரையாடும் போது கவனமாக உரையாடுங்கள்.

பணியில் உங்கள் பொறுப்புகளை சிறிது பதற்றத்துடன் கையாள்வீர்கள். இதற்கு எதிர்காலம் பற்றிய உங்கள் தேவையற்ற பயமே காரணம். அமைதியாக உற்சாகத்துடன் பணியாற்றுங்கள்.

கருத்து வேறுபாடு காரணமாக உங்கள் துணையுடன் ஈகோ பிரச்சினை ஏற்படும். அதனை தவிர்க்க வேண்டும். நட்பான அணுகுமுறை வேண்டும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். மேலும் உங்கள் சம்பாத்தியத்தை குடும்பத்தில் ஏற்படும் பொறுப்புகளுக்காக செலவு செய்ய நேரும்.




உங்கள் பொறுமை சோதனைக்குள்ளாகும் நாள். இன்று திட்டமிட்டு செயலாற்ற வேண்டியது அவசியம். பிரார்த்தனை மற்றும் பக்திப் பாடல்கள் கேட்பது உங்களுக்கு ஆறுதல் தரும்.

நீங்கள் குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. பணிகள் நிலுவையில் இருக்கும். அது உங்களுக்கு கவலையை அளிக்கும். சக பணியாளர்களிடம் இருந்து வரும் வதந்திகளை நம்ப வேண்டாம்.

உங்கள் துணையுடன் நல்ல தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். நீங்கள் இருவரும் வெளியிடங்களுக்குச் செல்வதற்கான வாய்ப்பு உள்ளது. இதன் மூலம் உறவு மேம்படும்.

இன்று பணம் சம்பாதிக்க சாதகமான வாய்ப்புகள் கிடைக்கும். உங்கள் சேமிப்பு திறன் அதிகரிக்கும்.

உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துங்கள்.




இன்று அமைதியாக இருக்க வேண்டும். நீங்கள் பதட்டப்படும்படியான சூழ்நிலைகள் உருவாகும். பிரார்த்தனை மூலம் ஆறுதல் பெறலாம். உங்களுக்கு பிரியமானவர்களுடன் உரையாடும் போது பதற்றப்படாமல் கவனமாகப் பேசுங்கள்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். அதனால் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. எனவே உங்கள் பணிகளை கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று உணர்ச்சிவசப்பட நேரலாம். இதனை தவிர்க்க வேண்டும். உங்கள் பிரியமானவருடன் நட்பாகவும், சகஜமாகவும் பழக வேண்டும்.

அதிக பணம் சம்பாதிப்பதற்கான வாய்ப்பு குறைந்து காணப்படுகின்றது. பணத் தட்டுப்பாடு காரணமாகப் பணம் கடன் வாங்க நேரும்.




இன்றைய நாள் சாதகமாக இருக்காது. இன்று யதார்த்தமான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது. உங்களது பல வீனங்களை பலங்களாக மாற்ற முயற்சி செய்யுங்கள்.

பணிகளில் தவறுகள் நேரலாம். எனவே பணிகளை கவனமாக கையாள வேண்டும்.

உங்கள் மன நிலையில் காணப்படும் மாறுபாடு காரணமாக உறவில் புரிந்துணர்வு பாதிக்கப்படும். உங்கள் துணையை மகிழ்விக்க முகத்தில் புன்னகையை கொண்டிருங்கள்.

இன்று பணம் சம்பாதிப்பதற்கான வாய்ப்பு குறைந்து காணப்படுகின்றது. எனவே இருக்கும் பணத்தைக் கொண்டு நிர்வகிக்க உங்களை தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.

இன்று மன அழுத்தத்தின் காரணமாக முதுகு வலி ஏற்பட வாய்ப்பு உள்ளது.




இன்றைய நாளை உங்களுக்கு சாதமாக்கிக் கொள்ள பொறுமை தேவை. இன்று அசௌகரியங்கள் காணப்படும். இன்று திட்டங்களைத் தீட்டி அதனை நம்பி செயலாற்ற வேண்டியது அவசியம்.

உங்கள் வேலையை உங்கள் மேலதிகாரிகள் மதிப்பிடுவதற்கான வாய்ப்பு உள்ளது. உங்கள் செயல்திறன் சிறப்பாக இருக்கும். உங்களிடம் படைப்பாற்றல் காணப்படும்.

உங்கள் உள்ளத்து ஏமாற்றங்களை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தைப் பாதிக்கும்.

செலவுகள் அதிகமாகக் காணப்படும். இன்று அது உங்களுக்குக் கவலையை அளிக்கும். எனவே பணத்தைக் கவனமான முறையில் செலவு செய்ய வேண்டும்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று பொதுவாக ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படும்.




இன்று விரைந்து செயலாற்றுவீர்கள். இன்றைய நாளைச் சிறப்பாகப் பயன்படுத்துவீர்கள். புதிய தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வீர்கள்.

உங்கள் சக பணியாளர்களிடம் நல்லுறவைப் பராமரிப்பீர்கள். பணியில் உங்கள் நேர்மை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்கள் நேர்மையான அணுகுமுறை மூலம் உங்கள் துணையை மகிழ்விப்பீர்கள். இதனால் நிலைமை உங்களுக்குச் சாதகமாக இருக்கும்.

சிறிய கடன் பெறுவதன் மூலம் உங்கள் பணத் தேவைகளை நீங்கள் பூர்த்தி செய்துகொள்வீர்கள். இருக்கும் பணத்தைக் குடும்பத்துக்காகச் செலவு செய்வீர்கள்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படுகின்றது.




உங்களிடம் சிறந்த ஆற்றல் காணப்படும். அதற்கான நற்பெயர் பெறுவீர்கள். உங்கள் பணியில் மாறுதல்கள் நேரலாம்.

இன்று பணிகள் அதிகமாக இருக்கும். நீங்கள் பணியில் மும்மரமாக செயல்படுவீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் அங்கீகாரம் பெறுவீர்கள்.

இன்று காதலுக்கு உகந்த நாள். உங்களின் சிறந்த உணர்வுகளை உங்கள் துணையுடன் பகிர்ந்து கொள்வீர்கள்.

நிதி சம்பந்தமான பிரச்சினைகள் பாதிப்பை ஏற்படுத்தாது. நீங்கள் பணத்தை சேமிப்பீர்கள்.

ஆரோக்கியத்தில் சிறிது கவனம் தேவை. கால் வலியால் அவதிப்பட நேரும்.




பல தடைகளுக்குப் பிறகு வெற்றியைக் காண்பீர்கள். கவலைகளை நீக்கி மனதை அமைதியாக வைத்திருங்கள்.

இன்று பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளதால் கவனமாக பணியாற்ற வேண்டும். பணியில் மும்மரமாக காணப்படுவீர்கள்.

உங்கள் துணையிடம் பாதுகாப்பின்மை உணர்வு கொள்வீர்கள். இது மகிழ்ச்சியைக் குறைக்கும். உங்கள் வேறுபாடுகளைக் களைய முயலுங்கள்.

இன்று பயணத்தின் போது பண இழப்புக்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன.

அதிக மன உளைச்சல் காரணமாகக் கால்களில் வலி காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 17.12.2024




அதிர்ஷ்டக் குறைவு காரணமாக கடைசி நிமிடத்தில் சிறந்த வாய்ப்புகளை இழப்பீர்கள். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணிகளைக் கையாளும் போது ஸ்திரத்தன்மை இழந்து காணப்படுவீர்கள். சக பணியாளர்கள் ஆதரவு கிட்டாது. மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்காது.

நீங்கள் உணர்ச்சி வசப்பட்ட நிலையில் இருப்பீர்கள். இது உங்கள் துணையுடனான உறவில் வெளிப்படும். உங்கள் துணையிடம் நட்பான அணுகுமுறை தேவை.

இன்றுஅதிகசெலவுகள்காணப்படும்.உங்கள்பொறுப்புகள் இன்று அதிகமாக காணப்படும். உங்களிடம் உள்ள குறைந்த பணத்தைக் கொண்டு பொறுப்புகளை நிறைவேற்ற இயலாது.




உங்கள் கடின உழைப்பின் மூலம் உங்கள் வாழ்க்கை தரத்தை உயர்த்திக் கொள்வீர்கள். உங்களுக்கு பிரியமானவர்களை அழைத்து உங்கள் வீட்டில் விருந்து கொடுப்பீர்கள். இது உங்களுக்கு உற்சாகத்தை தரும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். பணிகளை பொறுமையாகக் கையாள வேண்டும்.

உங்கள் துணையிடம் நட்பான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

இன்று கடன் வகையில் பண வரவு காணப்படும். பண இழப்பு ஏற்படாமல் இருக்க பணத்தை சேமிக்கவும்.

இன்று தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது. தியானம் மேற்கொள்வது நல்லது.




இன்று சிறப்பான நாளாக இருக்கும். தைரியமும் உறுதியும் காணப்படும். உங்களிடம் சிறந்த ஆற்றல் மற்றும் திருப்தி காணப்படும்.

உங்கள் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். இன்று உங்கள் பணியாற்றும் முறை சிறப்பாக இருப்பதன் காரணமாகச் சாதகமான பலன்கள் கிடைக்கும்.

உங்கள் துணையிடம் மிகவும் நேர்மையாக நடந்து கொள்வீர்கள். இதனால் இருவருக்கும் இடையே மகிழ்ச்சி அதிகரிக்கும்.

இன்று அதிக அளவு பணம் காணப்படும். தேவையான சமயத்தின் போது உங்களிடம் பணம் இருக்கும். அதனை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

பெரிய அளவிலான ஆரோக்கியக் குறைபாடுகள் காணப்படாது.




இன்று பொறுமையுடன் இருக்க வேண்டிய நாள். சூடான விவாதத்தை தடுக்க உரையாடுவதற்கு முன் ஒன்றிக்கு இரண்டு முறை நன்கு யோசிக்கவும். முக்கியமான முடிவுகளை இன்று எடுப்பதை தவிர்க்கவும்.

உங்களுக்கு கொடுத்த பணிகளை குறித்த நேரத்திலோ அல்லது அதற்கு முன்போ முடிப்பீர்கள். மிகுந்த உற்சாகத்துடன் பணிகளை முடிப்பீர்கள்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்களுக்குள் கருத்து வேறுபாடு காணப்படும். இதனைத் தவிர்க்க வேண்டும். நட்பான அணுகுமுறை வேண்டும்.

இன்று பண இழப்புக்கான வாய்ப்புகள் உள்ளன. அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவு காரணமாக நீங்கள் பணத்தை இழக்கலாம்.

இன்று ஆரோக்கியம் சிறந்து காணப்படும்.



